intellect
live your dream

IDAL/2025-26/SE/41

November 3, 2025

National Stock Exchange of India Ltd
BSE Ltd.

Scrip Symbol - INTELLECT
Scrip Code – 538835

Dear Sir/Madam,

Sub: <u>Newspaper publications pertaining to unaudited Financial Results for the quarter and half year ended September 30, 2025</u>

Please find enclosed Newspaper publications pertaining to unaudited Financial Results for the quarter and half year ended September 30, 2025 published on November 1, 2025, in the Newspapers viz. - Business Line (in English) and "Dinamani" (in Tamil) containing a Quick Response code and the details of the webpage where complete financial results of the Company is accessible.

Kindly take the above information on record.

Yours truly,
For **Intellect Design Arena Limited**

PRAKASH BHARADWAJ
Digitally signed by PRAKASH BHARADWAJ
Date: 2025.11.03 16:20:05 +05'30'

Prakash Bharadwaj
Company Secretary and Compliance Officer
ACS-37214

பிரசாரங்களில் மக்கள் பாதுகாப்புக்கு புதிய குழுவை அமைக்க தவெக திட்டம்

சென்னை, அக். 31: தமிழக வெற்றிக் கழகத்தின் பிரசாரம் மற்றும் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிகளில் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய ஓய்வு பெற்ற காவல் துறை உயரதிகாரிகளைக் கொண்ட திட்டமிடல் குழுவை அமைக்க அந்தக் கட்சித் தலைவர் விஜய் திட்டமிட்டுள்ளார்.

கடந்த செப். 27-ஆம் தேதி கரூரில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்ததைத் தொடர்ந்து, ஒரு மாத காலத்துக்கு தவெக கட்சி நடவடிக்கைகள் முழுவதுமாக நிறுத்தி வைக்கப்பட்டன.

ஒரு மாதத்துக்குப் பிறகுதான் பாதிக்கப்பட்டவர்களை விஜய் சென்னைக்கு அழைத்து ஆறுதல் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து மீண்டும் கட்சியின் கட்டமைப்பை வலுப்படுத்துவதில் விஜய் முனைப்பு காட்டி வருகிறார்.

அந்த வகையில், புதிதாக 28 பேர் கொண்ட நிர்வாகக் குழு அமைக்கப்பட்டு, ஆலோசனைக் கூட்டம் அக். 29-ஆம் தேதி நடைபெற்றது. இதைத் தொடர்ந்து, கட்சியின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை மேற்கொள்வதற்காக வரும் நவ. 5-ஆம் தேதி சிறப்புப் பொதுக்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளதாக விஜய் அறிவித்துள்ளார்.

இந்த நிலையில், இனி நடைபெறவுள்ள விஜய்யின் பிரசாரம் மற்றும் மக்கள் சந்திப்பு கூட்டங்களில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், ஓய்வு பெற்ற காவல் துறை உயரதிகாரிகளைக் கொண்டு திட்டமிடல் குழுவை அமைக்க விஜய் திட்டமிட்டுள்ளார்.

இந்தக் குழுவில் ஓய்வு பெற்ற டிஜிபி, ஏடிஜிபி என 15 அதிகாரிகள் இடம் பெறவுள்ளனர். இந்தக் குழு விஜய்யின் நிகழ்ச்சிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் திட்டமிடுவதுடன், தவெக தொண்டர் படைக்கு பயிற்சி மற்றும் ஆலோசனைகள் வழங்கும் என தவெக நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

நிதி மோசடி வழக்கு: தேவநாதனுக்கு இடைக்கால பிணை நீட்டிப்பு

சென்னை,அக்.31: நிதி மோசடி வழக்கில் கைது செய்யப்பட்ட தேவநாதனுக்கு வழங்கப்பட்ட இடைக்கால பிணையை மேலும் ஒரு வாரத்துக்கு நீட்டித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

சென்னை மயிலாப்பூரில் செயல்பட்டு வந்த 'தி மயிலாப்பூர் இந்து பெர்மனன்ட் ஃபண்ட்' நிதி நிறுவனத்தில் முதலீடு செய்த 100-க்கும் மேற்பட்ட முதலீட்டாளர்களிடம் பல கோடி ரூபாய் மோசடி செய்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. இதையடுத்து அந்த நிறுவன இயக்குநர் தேவநாதன் உள்பட 6 பேரை சென்னை பொருளாதாரக் குற்றப்பிரிவு போலீஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்த வழக்கில் தேவநாதனுக்கு பல்வேறு நிபந்தனைகளுடன் பிணை வழங்கிய சென்னை உயர்நீதிமன்றம், நிதி நிறுவன மோசடி வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றத்தில் ரூ.100 கோடியை வைப்புத் தொகையாக செலுத்த உத்தரவிட்டிருந்தது. மேலும், அக்.31-ஆம் தேதி நீதிமன்றத்தில் தேவநாதன் சரண் அடையவும் உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதி கே.ராஜசேகர் முன் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. தேவநாதன் தரப்பில் இடைக்கால பிணையை நீட்டிக்க வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது. காவல் துறை தரப்பில் ஆஜரான கூடுதல் குற்றவியல் வழக்குரைஞர் ராஜ்திலக், தேவநாதனுக்குச் சொந்தமான 27 சொத்துகள் முடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். அப்போது பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் என்.ஜி.ஆர்.பிரசாத், ரூ.100 கோடியை வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும் என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. ஆனால், இதுவரை ஒரு ரூபாய் கூட நீதிமன்றத்தில் வைப்புத் தொகையாக செலுத்தவில்லை. எனவே, அவரது பிணையை ரத்து செய்ய வேண்டும் என்றார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, தேவநாதன் சரண் அடைய மேலும் ஒரு வார கால அவகாசம் வழங்கி உத்தரவிட்டார். இந்த வழக்கை ஏற்கெனவே விசாரித்த நீதிபதி ஜெயச்சந்திரன் முன்பாக விசாரணைக்குப் பட்டியலிட பதிவுத் துறைக்கு உத்தரவிட்டார்.

பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் கட்டுமானப் பணிகளுக்கு இடைக்காலத் தடை

உயர்நீதிமன்றம் உத்தரவு

சென்னை,அக்.31: பள்ளிக்கரணை சதுப்பு நிலம் என கூறப்படும் பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பு வளாக கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள இடைக்காலத் தடை விதித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

சென்னை புறநகர் மாவட்ட வழக்குரைஞர் பிரிவு செயலர் ஜெ.பிரஷ்நேவ் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் அடுக்குமாடி கட்டடம் கட்ட சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் (சிஎம்டிஏ) அனுமதி அளித்துள்ளது.

இந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும். பள்ளிக்கரணை மட்டுமன்றி அந்த சதுப்பு நிலத்தைச் சுற்றி ஒரு கி.மீ. சுற்றளவுக்கு எந்தவிதமான கட்டுமான பணிகளுக்கும் அனுமதி அளிக்கக் கூடாது என சிஎம்டிஏ-வுக்கு உத்தரவிட வேண்டும் என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவாஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் வி.ராகவாச்சாரி, பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தின் வரைபடத்தை தாக்கல் செய்தார்.

மத்திய அரசு ராம்சர் தலங்களாக அறிவித்துள்ள சதுப்பு நிலப் பகுதியில் 1400 குடியிருப்புகள் கட்ட சிஎம்டிஏ அனுமதி வழங்கியுள்ளது. இது சட்டவிரோதமானது.

சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் இருந்து வரும் மழை வெள்ளநீரை உறிஞ்சக் கூடிய நிலப்பகுதிதான் இந்த சதுப்பு நிலம். அத்தகைய சதுப்பு நிலத்தில் அடுக்குமாடி கட்டுமானத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வெறும் மூன்று நாள்களில் இதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இது பொதுநலன், சுற்றுச்சூழல் விதிகளுக்கு எதிரானது. இந்த அனுமதியை வழங்க தமிழக அரசுக்கு அதிகாரம் இல்லை என்று வாதிட்டார்.

அரசுத் தரப்பில் ஆஜரான அரசு தலைமை வழக்குரைஞர் பி.எஸ்.ராமன், மனுதாரர் குறிப்பிடும் பகுதி சதுப்பு நிலம் இல்லை. சதுப்பு நிலத்தில் குடியிருப்பு கட்ட எந்த அனுமதியும் வழங்கவில்லை. பட்டா நிலத்தில் தான் குடியிருப்பு கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சதுப்பு நிலங்களைப் பாதுகாக்கும் வகையில், அதன் எல்லைகளை துல்லியமாக அளவிடும் பணி 2 வாரங்களில் முடிந்துவிடும். தற்போது கட்டப்படும் கட்டடத்துக்கு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், சுற்றுச்சூழல் அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படியே, சிஎம்டிஏ அனுமதி வழங்கியுள்ளது என்று வாதிட்டார்.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், சதுப்பு நிலங்கள் பாதுகாப்பு தொடர்பாக உச்சநீதிமன்றம் பல்வேறு உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. தாமாக முன்வந்து வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட தேசிய பசுமைத் தீர்ப்பாயமும் பல்வேறு உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. இவற்றை எல்லாம் கருத்தில் கொள்ளாமல், சிஎம்டிஏ எப்படி அனுமதி வழங்கியது?

சதுப்பு நில எல்லையை துல்லியமாக வரையறுக்கும் பணிகள் முடிவதற்கு முன்பே கட்டுமானங்களுக்கு சிஎம்டிஏ அனுமதி வழங்கினால், ஒட்டுமொத்த சதுப்பு நிலமும் அழிந்துவிடும்.

இது மிகவும் தீவிரமான பிரச்னை. சதுப்பு நில பாதுகாப்பு தொடர்பான வழக்குகளை உச்சநீதிமன்றம் விசாரித்து வருவதால், கட்டுமானத்துக்கு இடைக்காலத் தடை விதிப்பது அவசியமாகிறது என்று கருத்து தெரிவித்தனர்.

பின்னர், இந்த மனுவுக்கு மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை நவ.12-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

அதுவரை அந்தப் பகுதியில் எந்த கட்டுமானப் பணிகளையும் தனியார் கட்டுமான நிறுவனம் மேற்கொள்ளக்கூடாது என இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டனர்.

விலையில்லா மடிக்கணினி திட்டம்: 3 நிறுவனங்கள் தேர்வு

சென்னை, அக். 31: கல்லூரி மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்துக்காக 3 கணினி உற்பத்தி நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

கல்லூரி மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தவுள்ளது. இதற்காக குறைந்த தொகையில் விலைப்புள்ளிகளை அளித்த ஏசர், எச்பி, டெல் ஆகிய 3 நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிறுவனங்கள் சார்பில் மடிக்கணினிகள் உற்பத்தி செய்து தரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. கொள்முதல் செய்யப்படவுள்ள மடிக்கணினிகளின் மாதிரிகளை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் வெள்ளிக்கிழமை ஆய்வு செய்தார்.

இதன்பிறகு, மடிக்கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

தமிழகத்தில் கூடுதலாக 1,500 மெகாவாட் மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்பு

ஒப்பந்தத்தை அறிவித்தது மின்வாரியம்

சென்னை, அக். 31: தமிழகத்தில் மதுரை, கோவை, திருச்சி ஆகிய 3 மாவட்டங்களில் கூடுதலாக 1,500 மெகாவாட் மின்கலை ஆற்றல் சேமிப்பு அமைப்புகளை உருவாக்குவதற்கான ஒப்பந்தத்தை மின்வாரியம் கோரியுள்ளது.

நாடு முழுவதும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆற்றலை ஊக்குவிக்கவும், அதன்மூலம் மின்சார உற்பத்தியைப் பெருக்கவும் அனைத்து மாநில அரசுகளுக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இதற்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து அதன் மூலம் நிதியுதவிகளையும் வழங்கி வருகிறது.

தமிழகத்திலும் பசுமை மின் உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கும் விதமாக தமிழ்நாடு பசுமை மின் உற்பத்தி நிறுவனத்தையும் தமிழக அரசு உருவாக்கி செயல்படுத்தி வருகிறது. இந்நிலையில், தற்போது 26,000 -ஆக இருந்து வரும் தமிழகத்தின் பசுமை மின் உற்பத்தி திறனை 2030-க்குள் 1 லட்சம் மெகாவாட்டாக உயர்த்த தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக, முதல்கட்டமாக 1,500 மெகாவாட் திறனில் மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்பதற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, கடந்த மார்ச் மாதம் அதற்கான ஒப்பந்த கோரப்பட்டது.

இதையடுத்து ஒப்பந்தம் எடுத்த நிறுவனங்கள் கடந்த ஜூன் முதல் அதற்கான பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்நிலையில், இரண்டாம் கட்டமாக மேலும் கூடுதலாக 1,500 மெகாவாட் திறனில் மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்பதற்கான கட்டமைப்பை ஏற்படுத்த மின்வாரியம் முடிவு செய்துள்ளது.

மின்வாரிய அதிகாரிகள் கூறியது: புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தைத் திறம்பட பயன்படுத்தும் வகையிலும், உபரியாக உள்ள மின்சாரத்தைச் சேமித்து மின் தேவை அதிகமாக உள்ள நேரங்களில் பயன்படுத்தும் வகையிலும் மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்புகளை உருவாக்கும் பணியில் மின்வாரியம் ஈடுபட்டு வருகிறது.

அதன்படி, இரண்டாம் கட்டமாக 1,500 மெகாவாட் திறனுக்கான மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்பைக் கட்டமைப்பதற்கான அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதற்காக தமிழகத்தில் மதுரை, திருச்சி, கோவை உள்ளிட்ட மாவட்டங்களில் அதற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, ஒப்பந்தமும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தில் விதிமுறைகளுக்கு உடன்படும் நிறுவனங்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்படும். அவர்கள் விரைவில் அதற்கான பணிகளைத் தொடங்குவர் என்றனர்.

வால்பாறையில் இ-பாஸ் நடைமுறை: தமிழக அரசுக்கு நீதிமன்றம் பாராட்டு

சென்னை, அக். 31: வால்பாறையில் இ-பாஸ் நடைமுறைகளை சனிக்கிழமை முதல் மேற்கொள்ள தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்த தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் பாராட்டு தெரிவித்தது.

சுற்றுச்சூழல், வனம் மற்றும் வனவிலங்குகள் தொடர்பான வழக்குகளை நீதிபதிகள் என்.சதீஷ்குமார், டி.பரத சக்கரவர்த்தி ஆகியோர் அடங்கிய சிறப்பு அமர்வு விசாரித்து பல்வேறு உத்தரவுகளை பிறப்பித்து வருகிறது. கோவை மாவட்டம், வால்பாறைக்குச் செல்ல நவ. 1-ஆம் தேதி முதல் இ-பாஸ் நடைமுறையை அமல்படுத்த உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதிகள் என்.சதீஷ்குமார், டி.பரத சக்கரவர்த்தி ஆகியோர் அடங்கிய சிறப்பு அமர்வில் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது கோவை மாவட்ட ஆட்சியர் தரப்பில் அறிக்கை ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

அதில், ஊட்டி, கொடைக்கானல் போன்று வால்பாறையிலும் சனிக்கிழமை முதல் இ-பாஸ் நடைமுறை அமல்படுத்தப்படுகிறது. இதற்காக வால்பாறை செல்லும் பாதைகளில் சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. நெகிழிப் பொருள்களைப் பயன்படுத்தக் கூடாது என்பதற்காக சோதனைச் சாவடிகளில் தீவிர சோதனை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழக முதல்வர் அறிவித்த மஞ்சப்பை திட்டமும் அமல்படுத்தப்பட்டுள்ளது. வனப் பகுதியில் நெகிழிப் பொருள்கள் சேகரிக்கும் பணியை வனத்துறை கடந்த ஜூலை மாதம் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், கல்லூரி மாணவர்கள் மூலம் மேற்கொண்டது.

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறித்த பதாகைகளும் வைக்கப்பட்டுள்ளதாக அதில் கூறப்பட்டிருந்தது.

அந்த அறிக்கையைப் படித்துப் பார்த்த நீதிபதிகள், தமிழக அரசுக்கு பாராட்டு தெரிவித்தனர்.

மேலும், இதுதொடர்பாக மேலும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டு விசாரணையை வரும் நவ. 28-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

QUICKLY.

City Union Bank secures $50 m financing from IFC

Chennai: Private sector bank City Union Bank (CUB) has secured $50 million commitment from International Finance Corporation (IFC), a member of the World Bank Group. The financing is aimed at supporting micro small and medium enterprises (MSMEs) in transitioning to energy-efficient and cost-effective solutions. Kamakodi N, Managing Director and Chief Executive Officer of CUB said that the main utilisation of the funds will be for new onward lending and refinancing of solar power-related loans for MSMEs. "We have had a significant growth in solar power lending in the last four to six quarters," he said. Wind energy is another area where there is demand among MSMEs. We have lent around ₹500 crore in aggregate towards solar in the last four-five quarters, he said. "We are now stepping towards green financing to support our country in achieving sustainable growth," he added.
OUR BUREAU

Narayana Health enters UK with takeover of Practice Plus

AFFORDABLE CARE. Hospital chain eyeing UK's expanding private healthcare demand

Our Bureau
Bengaluru


HEALTHCARE MARKET ACCESS. Dr Devi Prasad Shetty, Chairman, Narayana Health

Narayana Health has acquired a 100 per cent stake in UK-based Practice Plus Group Hospitals for £188.78 million, marking its entry into the British healthcare market.

The Bengaluru-based hospital chain had been eyeing UK expansion and was previously reported to be in talks to acquire a controlling stake in Spire Healthcare Group Plc, the country's largest private healthcare player by revenue.

The company eventually finalised the acquisition of Practice Plus Group, purchasing 60,001 equity shares at £3,146.29 per share (face value £0.02 each). This marks Narayana Health's second international expansion after establishing Health City Cayman Islands in the Caribbean.

£250M TURNOVER

Practice Plus Group operates a network of 16 healthcare facilities across the UK, including seven hospitals, three surgical centres, two urgent treatment centres, three musculoskeletal/diagnostic centres, and one ophthalmology centre, with a combined capacity of 330 beds. The group performs approximately 80,000 surgeries annually and recorded an estimated turnover of £250 million in FY25 (year ended September 2025).

Through this acquisition, Narayana Health gains access to the UK healthcare market, where demand for surgeries, particularly in the private sector, is projected to grow significantly in the coming years as the National Health Service (NHS) faces capacity constraints.

ALIGNED MISSIONS

Dr Devi Prasad Shetty, Founder and Chairman of Narayana Health, said the acquisition aligns with both organisations' missions to make quality healthcare accessible beyond the premium private healthcare segment.

"Like Narayana Health, Practice Plus Group recognised that the majority of patients struggle to access healthcare, while only a minority can afford costly private treatment. We have both been working to serve patients in between and offer more accessible private healthcare options," he stated.

Godda plant to be connected to Indian grid by Dec: Adani Power

Avinash Nair
Ahmedabad



Adani Power's ultra-supercritical 1600 MW Godda Thermal Power Plant in Jharkhand — currently exporting all its electricity to Bangladesh — is slated for integration with India's national power grid by December 2025.

This key milestone will enable the plant to participate in India's electricity market under specific conditions.

"We are expecting that it (Godda power plant) will get connected by December 2025. If there is persistent no scheduling from Bangladesh because of lack of demand or if there is a payment default under the PPA (power purchase agreement) we have been allowed to sell power to the Indian grid," SB Khyalia, CEO, Adani Power Limited, told investors during an earnings call on Thursday.

The Godda plant was initially commissioned as India's first private sector thermal plant dedicated for cross-border power export.

The first 800 MW unit of the plant was commissioned on April 6, 2023 and the second 800 MW unit of the plant was commissioned on June 26, 2023.

ARREAR PAYMENT

Under a 25-year PPA with Bangladesh, the plant was hit by payment arrears exceeding $500 million from Bangladesh's power utility. In August 2024, the Indian government amended the rules allowing Adani Power to sell power from Godda in the Indian market.

Adani Power on Thursday said that most of the outstanding dues have been paid by Bangladesh and only half a month of payment is currently due. The company also said that the plant load factor (PLF) of Godda plant was much better than the average PLF of thermal plants in the country.

Pointing out that the PLF for Godda stood at 72 per cent during the second quarter of the current financial year, Khyalia said, "PLF of Godda is much better than the Indian grid because the PLF of most of the thermal power projects in Indian grid is between 60-65 per cent."

Pointing out that the company was in various stages of bid submission for 22,000 MW of thermal power, Khyalia said that the company is expecting to bag the 3,200 MW thermal power project in Assam.

"The bids have been concluded and we are the L1 party there. The approval of the commission is also received so we hope that we should have a positive communication shortly," he added.

Bajaj Auto tops electric two-wheeler registrations in October: Vahan data

TE Raja Simhan
Chennai

Electric two-wheeler registrations *(units)*

Company	Oct 2024	Sep 2025	Oct 2025
Bajaj Auto	28,441	19,687	29,562
TVS Motor Company	30,205	22,659	28,006
Ather Energy	16,248	18,268	26,713
Hero Motocorp	7,354	12,817	15,052
Ola Electric	41,843	13,420	15,481
Greaves Electric	3,990	4,234	6,976

Source: Vahan Data collated on October 31 at 8.15 pm

Registration of electric two-wheelers (both pure EV and battery operated vehicle) in October rose by 31 per cent to 1,35,554 units as against 1,03,762 units in September, according to Vahan data collated on October 31, at 8.15pm.

Year-on-year, Ola Electric saw the sharpest decline to 15,481 units in October 2025, as against 41,843 a year back.

MARGINAL DROP

TVS Motor saw a marginal drop.

On the contrary, Bajaj, Ather, Hero Motocorp and Greaves saw an increase, says the data. All the top original equipment manufacturers (OEMs) showed strong growth in October 2025 and industry trackers attributed the uptick mainly to the strong festive season sale.

Bajaj topped the list, accounting for 29,562 units in October, as against 19,687 units in September, a 50 per cent month-on-month (m-o-m) growth. TVS Motor followed with 28,006 units (22,659 units) — 24 per cent growth — and Ather saw a 46 per cent growth to 26,713 units (18,268).

HERO HONDA

Hero Honda's registrations were up 17 per cent to 15,052 units (12,817 units), while Ola Electric saw a 15 per cent increase to 15,481 units (13,420).

Greaves Electric reported the highest growth with a 65 per cent increase to 6,976 units (4,234 units), the data says.

MARKET SHARE

In terms of market share, Bajaj and Ather Greaves Electric saw an increase in October versus September, while TVS Motor, Hero Motocorp and Ola Electric saw a decline.

Bajaj topped with a 22 per cent share in October, as against 19 per cent in September.

TVS Motor's market share dropped to 21 per cent from 21.84 per cent in September, says the data.

GST disruptions hit Godrej Consumer's Q2

Aroosa Ahmed
Mumbai


GAINING MARKET. The recent GST rate reduction is a welcome structural reform that will strengthen long-term consumer demand

Godrej Consumer Products Limited (GCPL) reported a low single digit revenue rise on an underlying volume growth of 3 per cent in Q2 of FY26, with the company saying demand was affected by short-term disruptions by the transition to the new Goods and Services Tax (GST) regime.

The company said it expected demand to normalise in the coming months "as trade channels return to normal".

Consolidated revenue in the September quarter rose 4 per cent on year to ₹3,825 crore.

However, net profit dipped 6.5 per cent to ₹459 crore due to fall in other income, rise in expenses and one-off litigation-related costs. The company also announced the acquisition of men's grooming brand 'Muuchstac' via slump sale from Trilogy Solutions Private for ₹449 crore.

The company's EBITDA margin stood at 19.3 per cent.

Despite the headwinds from the GST transition and continued macroeconomic challenges in Indonesia, the quarter was resilient, said Sudhir Sitapati, Managing Director and CEO.

VOLUME GROWTH

"Despite these headwinds, our India business, excluding soaps, has delivered double-digit underlying volume growth, reflecting the strength of our core portfolio and execution. The recent GST rate reduction is a welcome structural reform that will strengthen long-term consumer demand. However, this transition led to short-term trade disruptions as the channel adjusted to new pricing and cleared old inventory, particularly impacting soaps and hair colour. Despite this, we continue to gain market share in soaps and other key categories," he said. In the home care segment, the company delivered 6 per cent growth, led by strong performance in air fresheners and fabric care.

The company's international portfolio faced macro and competitive pressure in Indonesia, which was offset by performance in Africa.

In the near term, the company is expecting to strengthen its performance sequentially through FY26,

> **Despite headwinds India business has delivered** double-digit underlying volume growth, reflecting the strength of core portfolio

with the second half delivering a stronger trajectory than the first.

"Given the temporary pressures in these international markets, consolidated EBITDA growth may be marginally lower. Nevertheless, we remain firmly confident in our strategy, the resilience of our portfolio, and the strength of our brands. With disciplined execution and continued focus on innovation and operational excellence, we are well-positioned to deliver sustainable and profitable growth in the periods ahead," added Sudhir Sitapati.

We see opportunities in India's green tugboats programme: Svitzer CEO

Aneesh Phadnis
Mumbai

> We see immense opportunity to bring our knowledge to the Indian market and become a part of India's green transition programme
>
> **KASPER FRIIS NILAUS**
> Chief Executive Officer, Svitzer

Svitzer, among the world's largest harbour towage services company, sees immense opportunities in India, its Chief Executive Officer Kasper Friis Nilaus said on Thursday after signing a letter of intent with Cochin Shipyard (CSL) for manufacture of new design electric tugboats.

"We are at the forefront of decarbonisation in the towage industry. We see immense opportunity to bring our knowledge to the Indian market and become a part of India's green transition programme," Nilaus said.

WIDER VISION

The collaboration comes in the backdrop of government's drive to strengthen shipbuilding in India and aligns with its wider vision to replace diesel powered tugs with cleaner alternatives.

Under the letter of intent, the two companies will collaborate on manufacturing new generation electric tugs offered under TRAnsverse tugs brand name.

"This collaboration will showcase CSL's world-class capabilities, deepen local supply chains and accelerate the availability of green high-performance tugboats for ports at home and abroad," said company's chairman and managing director Madhu S Nair.

Currently, Svitzer provides towage services at Pipavav port and is also keen to participate in green tug projects at other Indian ports. "Svitzer routinely engages with port authorities across India," Nilaus said. He declined to comment on ongoing tenders.

The Deendayal Port Authority which operates the Kandla port has placed an order for battery-powered tugboats. Jawaharlal Nehru Port Authority, Paradip port and VOC Port Tuticorin have also initiated steps to procure electric tugs.

Globally, Svitzer operates 446 vessels across 143 ports, 40 terminals and 30 countries. Svitzer is a privately-owned company of A P Moller Holding of Denmark. It was a part of Maersk for over four decades and spun off in a demerger exercise in 2024.

In 2024 Svitzer reported a revenue of $ 916.5 million. Nilaus said Svitzer has eleven TRAnsverse tugs on order and three in operations in ports in Australia and the Netherlands. The company said electric tugs represent a small but growing share — one full operating electric tug is operating in Sweden and Denmark.

"We have several tugs with hybrid diesel-electric power in other markets," Nilaus said.

LT Foods shares fluctuate on Q2 results

Anupama Ghosh
Mumbai



LT Foods Ltd shares traded at ₹419.30 on the National Stock Exchange (NSE) as of 12:05pm on Friday, up 0.52 per cent from the previous close of ₹417.15.

The stock opened higher at ₹429.80 and touched an intraday high of ₹431 before retreating to a low of ₹408.20, reflecting volatility following the company's quarterly results announcement.

The global FMCG company reported unaudited consolidated results for the quarter and half year ended September 30, 2025, on Thursday.

Total revenue for Q2 FY26 reached ₹2,772 crore, marking a 30 per cent year-on-year increase, while EBITDA grew 24 per cent to ₹316 crore and profit after tax (PAT) rose 9 per cent to ₹164 crore.

REVENUE SURGE

For the first half of FY26, the company reported revenue of ₹5,273 crore, up 25 per cent year-on-year, with EBITDA growing 20 per cent to ₹619 crore.

However, profit margins showed compression, with EBITDA margin decreasing by 60 basis points to 11.4 per cent in Q2 and PAT margin declining by 120 basis points to 5.9 per cent.

The company's basmati and other specialty rice business grew 24 per cent in H1 FY26, while its organic segment expanded 26 per cent year-on-year.

Management attributed the performance to strategic brand investments and growing consumer demand across key markets.

Trading activity remained robust with 10.29 lakh shares changing hands, valued at ₹43.10 crore.

The stock's 52-week high stands at ₹518.55, recorded on July 17, 2025, while the 52-week low was ₹288.25 on April 7, 2025.